

திருப்பூர் மாவட்டம், குண்டடம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் நேரில் பார்வையிட்டு தொழிலாளர் நலத்துறையின் சார்பில் பயனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி, குண்டடம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.சந்திரசேகரன், பேரூர் கழக செயலாளர் அன்பு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஆற்காடு அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் மாவட்ட அளவிலான கலைத் திருவிழா 2025 போட்டியினை அமைச்சர் ஆர்.காந்தி தொடங்கி வைத்து மாணாக்கர்களின் கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நகரமன்ற தலைவர் தேவி, பவளக்கொடி சரவணன், புவனேஸ்வரி சத்தியநாதன், ஏ.வி.சரவணன், சொக்கலிங்கம், ஏ.ஜி.ரவி, ருக்மணி, விஜயகுமார், பாவை பழனி, பென்ஸ் பாண்டியன், ஆர்.கோட்டி, ஆனந்தன் துரை மற்றும் அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ஆஸ்திரேலிய பெரியார் – அம்பேத்கர் படிப்பு வட்டம் சார்பில்

# 4வது பன்னாட்டு மனிதநேய மாநாடு! முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து உரை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, சிறப்புரை!

சிட்னி, அக். 30 -

ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் கடந்த ஐந்தாண்டுகளாக ஆஸ்திரேலியாவில் செயல்பட்டு வருகிறது. சாதி மத பிரிவினைகளுக்கும் மதவெறி மற்றும் இன வெறுப்புக்கும் எதிராக பல்வேறு நடவடிக்கைகளை இந்தப் படிப்பு வட்டம் எடுத்து வருகிறது.

ஆங்கிலத்தில் 'PATCA' என்று அழைக்கப்படும் இந்த அமைப்பின் முயற்சியால் ஆஸ்திரேலியா குவின்ஸ்லாந்து மாநிலம், "சட்டப்படி சாதி என்பது நிறவெறியைப்போல் ஒரு பாகுபடுத்தும் காரணி" (Caste is a discriminating factor) என்று அங்கீகரித்துள்ளது.

அதன் தொடர் நடவடிக்கையாக ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டமும் பெரியார் பன்னாட்டமைப்பும் இணைந்து நடத்தும் நான்காவது பன்னாட்டு மனித நேய மாநாடு. 2025 நவம்பர் 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் ஆஸ்திரேலியா மெல்பர்ன் நகரத்தில் நடைபெறுகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து மனித நேயர்கள் பெரியார் - அம்பேத்கர் சிந்தனையாளர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

தமிழ்நாடு முதல்வர் காணொலி வழியே இம்மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் நாடாளு மன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளருமான ஆ. இராசா அவர்கள் நிறைவுரையாற்றுகிறார்.

பேராசிரியர் சுப. வீரபாண்டியன், வழக்கறிஞர் அருள்மொழி, கவிஞர் சல்மா (நாடாளுமன்ற உறுப்பினர்) தோழர் ஓவியா ஆகியோர் இம்மாநாட்டில் உரையாற்றுகிறார்கள்.

இந்தியாவில் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, டெல்லி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சிந்தனையாளர்கள் இம்மாநாட்டில் பங்கேற்கிறார்கள்.

பெரியார் பன்னாட்டு அமைப்பின் தலைவர் மருத்துவர் சோம இளங்கோவன்

ஆஸ்திரேலிய பெரியார்-அம்பேத்கார் சிந்தனை வட்டத்தின் நிர்வாகிகள்:

தலைவர் டாக்டர். அண்ணாமலை மகிழ்நன், துணைத்தலைவர் டாக்டர். முகம்மது ஹாரூண், செயலாளர்: சுமதி விஜயகுமார், பொருளாளர்: திருமலை நம்பி ஆகியோர் இந்நிகழ்வுக்கு சிறப்பான ஏற்பாட்டைச் செய்துள்ளார்கள்.

### விருதுநகர் மாவட்டக் கழகம் சார்பில்


# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர்,அக். 30 -

விருதுநகர் மாவட்ட கழகச் செயலாளர்கள் - அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருதுநகர் திருச்சுழி அருகில் உள்ள கானா விளக்கில் இன்று (30.10. 2025-வியாழக்கிழமை), காலை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குருபூஜை விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு திமுக சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் விருதுநகர் தெற்கு, வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பகுதி மற்றும் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைச் செயலாளர் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள், கழக தொண்டர்கள் என அனைவரும் பங்கேற்ற வகையில் இரு வண்ணக் கொடி ஏந்தி விண்ணை முட்டும் அளவிற்கு முதல்வரை வரவேற்று ஓசைகள் எழுப்பி சிறப்பான வரவேற்பு அளித்திட வேண்டும். இவ்வாறு தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# கோவை வடக்கு மாவட்ட பாக நிலை முகவர்கள் - பாக டிஜிட்டல் முகவர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

கோவை, அக். 30 -

கோவை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி விடுத்துள்ள அறிக்கை வருமாறு : கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 28.10.2025 செவ்வாய்க்கிழமை அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" பயிற்சிக் கூட்டத்தில் நமக்கு இட்ட ஆணைக்கிணங்க மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் (BLA2) பாக நிலை முகவர்கள் (BDA) பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் பயிற்சி பாசறை கூட்டம் இன்று (30.10.2025 - வியாழக்கிழமை அன்று காலை 09:00 மணியளவில் தொண்டாமுத்தூர், ராஜலட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட தொண்டாமுத்தூர் கவுண்டம் பாளையம் மேட்டுப்பாளையம் ஆகிய தொகுதிகளில் உள்ள 1,084 வாக்குச் சாவடிகளின் BLA2 பாக நிலை முகவர்கள் BDA பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். மேலும் இக் கூட்டத்தில் கோவை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், (Booth) பூத் பாகப் பொறுப்பாளர்கள், BLA2 பாக நிலை முகவர்கள், BDA பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மேற்கு மண்டல கழகப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# கோவை தெற்கு மாவட்ட பாக நிலை முகவர்கள் - பாக டிஜிட்டல் முகவர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் அறிக்கை!

கோவை, அக். 30 -

கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி " தேர்தல் பிரச்சார பயிற்சி கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்களுக்கு கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் வேண்டுகோள்.



கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி" தேர்தல் பிரச்சார பயிற்சி கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சூலூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை ஆகிய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பாக நிலை முகவர்கள் (BLA2) மற்றும் பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA) ஆலோசனைக் கூட்டம் இன்று (30.10.2025 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் ஈச்சனாரி செல்வம் மஹாலில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் மிகச்சி றப்பாக நடைபெறவுள்ளது.

அதுசமயம் கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பாகங்களின் பாக நிலை முகவர்கள் (BLA2), பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), பூத் ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் 457 மர அறுவை இயந்திரங்கள் தயார் நிலை!

சென்னை, அக். 30 -

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ள மரங்களின் கிளைகளை கத்தரித்து அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 17.10.2025 அன்று காலை 8.30 மணி முதல் நேற்று முன்தினம் (28.10.2025) காலை 8.30 மணி வரை சராசரியாக 267.80 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. மேலும், 28.10.2025 காலை 8.30 மணி முதல் காலை 11 மணி வரை சராசரியாக 5.89 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.அதிகபட்சமாக மேடவாக்கம் சந்திப்பில் 11.40 மி.மீ. மழைப்பொழிவும் (பெருங்குடி மண்டலம்), குறைந்த பட்சமாக முகலிவாக்கம் பகுதியில் 0.60 மி.மீ (ஆலந்தூர் மண்டலம்) பெய்துள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 15 மண்டலங்களில் 01.07.2025 முதல் இது வரை மொத்தம் 66,117 மரங்களின் கிளைகள் கத்தரித்து அகற்றப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்காக 15 ஹைட்ராலிக் மர அறுவை இயந்திர வாகனங்கள், 2 ஹைட்ராலிக் ஏணிகள், 224 கையடக்க மர அறுவை இயந்திரங்கள், 216 டெலஸ்கோபிக் மர அறுவை இயந்திரங்கள் என மொத்தம் 457 மர அறுவை இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

மேலும், தற்போது தொடங்கியுள்ள வடகிழக்குப் பருவமழையின் காரணமாக விழுந்த மரங்கள் மற்றும் மரங்களின் கிளைகளை அகற்றும் பணிகளும் உடனுக்குடன் மேற்கொள்ளப்பட்டது.

17.10.2025 அன்று முதல் தொடங்கிய வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 27.10.2025 வரை 55 மரங்கள் மற்றும் மரக்கிளைகள் அப்புறப்படுத்தப் பட்டுள்ளன. 28.10.2025 அன்று மழையின் காரணமாக விழுந்துள்ள 4 மரங்கள் மற்றும் மரக்கிளைகள் அகற்றும் பணி நடைபெற்றது. மேலும், வடகிழக்குப் பருவமழையின் காரணமாக விழும் மரங்களை உடனுக்குடன் அகற்றுவதற்காக மண்டலத்திற்கு தலா 12 பணியாளர்கள் கூடுதலாக நியமிக்கப்ப ட்டுள்ளனர். மேலும், மரக்கழிவுகளை அப்புறப்படுத்துவதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலா ஒரு டாடா ஏஸ் வாகனம் என 15 வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.





கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி, கரூரில் தமிழ்நாடு ஸ்பீடு ஸ்கேட்டிங் அசோசியேஷன் நடத்திய, 15வது தமிழ்நாடு ஸ்பீடு ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளித்தார். அப்போது ஸ்கேட்டிங் போட்டியில் பங்கேற்ற கிருஷ்ணகிரி மாவட்ட முரசொலி நிருபர் பார்த்திபன் மகன் கௌஷிக்கை விசாரித்து வெகுவாக பாராட்டினார்.

# மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு !

மதுரை, அக். 30 -

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 05.00 மணி அளவில் அண்ணாநகர் ட்வின்ஸ் மஹாலில், அவைத்தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெறுகிறது.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சிக் கூட்டம் !

கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரில் அ.தி.மு.க. கிளை செயலாளர் காந்தராஜ், பா.ஜ.க. ஒன்றிய மகளிர் அணி செயற்குழு உறுப்பினர் தீபிகா, ஒன்றிய துணை செயலாளர் பிரியா, இளைஞரணி சதீஷ், தவெக ஒன்றிய துணை செயலாளர் ராஜேஷ் ஆகியோர் தலைமையில் 200க்கும் மேற்பட்டோர், அக்கட்சிகளில் இருந்து விலகி, தி.மு.க.வில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், ஒன்றிய செயலாளர்கள் ராஜேந்திரன், அறிஞர், பேரூர் செயலாளர் வெங்கட்டப்பன். பேரூராட்சி தலைவர் சந்தோஷ்குமார், மாவட்டப் பிரதிநிதி கார்த்திகேயன். ஞானவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.